கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 214/2018

பிரதிவாதி தரப்பு சாட்சி 2 பரமேஸ்வரன் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 02.08.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பரமேஸ்வரன் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | செவத்தான் | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 33 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் நகராட்சி சார்பாக சாட்சியம் அளிக்கிறேன். நான் சாட்சியம் அளிக்க 7 ம் பிரதிவாதி எனது அதிகாரம் வழங்கியுள்ளாரா என்றால் வழங்கியுள்ளார். அதை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய விவரங்கள் நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். என் தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்து தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் சமீப காலத்தில் ஏற்பட்டவை என்றால் நகர பதிவேடு உருவான காலத்தில் ஏற்பட்டவை. தாவா சொத்து சம்மந்தமான அனைத்து ஆவணங்களையும் பராமரிப்பது எங்கள் அலுவலகத்தில் தான் என்றால் சரிதான்.

2. தாவா சொத்து சம்மந்தமான பழைய ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் உள்ளதா என்றால் நகர புலமாக மாறிய பின்னிட்டு உள்ள ஆவணங்கள் தான் எங்கள் அலுவலகத்தில் உள்ளது. பழைய ஆவணங்கள் கிராம பதிவேடுகளில் தான் பார்க்க வேண்டும். 8 முதல் 10 பிரதிவாதிகளுக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் ஆமாம். தாவா சொத்து சம்மந்தமான பழைய ஆவணங்கள் தாக்கல் செய்தால் உண்மை தெரிந்து விடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமான நத்தம் அடங்கல், UDR பதிவேடு ஆகியவை எங்கள் அலுவலகத்தில் இருக்கும் என்றால் சரியல்ல. 8 முதல் 10 பிரதிவாதிகள் அலுவலகத்தில் இருக்கும்.

**வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**
**Kulithalai.**